

# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..! கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன், தி.மு.க இளைஞர் அணி நடத்தும் 'என் உயிரினும் மேலான..!' பேச்சுப் போட்டியில், மண்டல அளவில் 913 பேர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் தேர்வான 182 பேருக்கு மாநில அளவிலான இறுதிப் போட்டி கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

**26-10-2024, சனிக்கிழமை**

| வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் |
|---|---|---|
| சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், கரூர், திருப்பூர், கோவை | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–18. | திண்டுக்கல் ஐ.லியோனி, கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| ஈரோடு, நீலகிரி, திருச்சி, பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி | சர்.பிட்டி.தியாகராயர் அரங்கம், தியாகராய நகர், சென்னை–17 | முனைவர் சபாபதி மோகன், நாஞ்சில் சம்பத், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, கா.அமுதரசன் |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● இறுதிப் போட்டிக்கு வரும் போட்டியாளர்கள் 25–10–2024 மாலைக்குள் சென்னை வந்து சேர வேண்டும். ● போட்டியாளர்கள் பெற்றோர்களில் ஒருவரை உடன் அழைத்து வரலாம். ● 25.10.2024 மாலை முதல், பரிசளிப்பு விழா நடைபெறும் 27.10.2024 மதியம் வரை போட்டியாளர்கள் அவசியம் சென்னையில் இருக்க வேண்டும். போட்டியாளர்களுக்கும் உடன் வரும் ஒரு நபருக்கும் மூன்று நாள்களுக்குத் தங்குமிடமும், உணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

● 26–10–2024 அன்று சரியாக காலை 9 மணிக்கு மாநில அளவிலான இறுதிப்போட்டி தொடங்கும்.

● **என்றென்றும் பெரியார்–ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் – நவீன தமிழ்நாட்டின் சிற்பி** ● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

● மேற்கண்ட ஐந்து தலைப்புகளில் நடுவர்கள் தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பின்கீழ், போட்டியாளர்கள் பேச வேண்டும். எனவே ஐந்து தலைப்புகளில் எந்தத் தலைப்பைக் கொடுத்தாலும் பேசுவதற்கு ஏற்ற வகையில், போட்டியாளர்கள் தயார் செய்து கொள்ளவும். ● பேசுவதற்கான கால அளவு 5 நிமிடங்கள். மூன்று நிமிடங்கள் முடிந்ததும் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாவது எச்சரிக்கை மணி ஒலித்ததும், போட்டியாளர்கள் தங்கள் உரையை நிறைவு செய்யவேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

**அன்பகம்**, சென்னை – 18.
நாள் : 23–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி


